**கொழும்பை அண்டிய புகையிரத வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டம் - 2023**

---

கொழும்பை அண்டிய புகையிரத வினைத்திறன் முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய 3806 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவுள்ளதுடன் இலங்கைப் புகையிரதத் திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது.

முன்னுரிமை போக்குவரத்து செயற்திட்டத்தின் தயார்நிலையை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். செயற்திட்ட நடவடிக்கைகள் (அ) முன்னேற்றப்பட்ட செயற்பாட்டு வினைத்திறன் (ஆ) வலுப்படுத்தப்பட்ட பராமரிப்பு இயலளவு (இ) முன்னேற்றப்பட்ட புகையிரத பாதுகாப்பு (ஈ) தரமுயர்த்தப்பட்ட தொழில்நுட்ப பயிற்சி நிலையம் மற்றும் (உ) வலுப்படுத்தப்பட்ட செயற்திட்ட அமுல்ப்படுத்தல் இயலளவு மற்றும் எதிர்கால புகையிரத செயற்திட்டங்களின் தயார்ப்படுத்தல் என்பவற்றின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 47,216 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 148 மில்லியன் தொகையானதுடன் இதில் ரூபா 39,970 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 125 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் (ஏடிபீ) நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 7,246 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 23 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 செப்தெம்பர் 06 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏடிபீ ஆல் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டத்திற்கான பாதிடப்பட்ட கடப்பாட்டுக் கட்டணங்கள் ஐ.அ.டொலர் 350,000 ஆக இருந்ததுடன் செயற்திட்டம் முடிவடைய இன்னும் ஒரு வருடம் உள்ள போதிலும் உண்மையான கடப்பாட்டுக் கட்டணம் ஐ.அ.டொலர் 788,399 ஆக இருந்தது. அதன் பின்னர் கடப்பாட்டுக் கட்டண மிகை ரூபா 126 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 438,399 ஆக இருந்தது. | 126 | ஐந்து சம்பவங்களின் விளைவாக திட்டமிடப்பட்ட பணவளிப்பை உரிய நேரத்தில் மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டதால் செயற்திட்ட நிர்வாகக் கையேட்டில் மதிப்பிடப்பட்ட கடப்பாட்டுக் கட்டணங்கள் மீறப்பட்டுள்ளன. | பாதீட்டின் பிரகாரம் திட்டமிடப்பட்ட பணவளிப்புக்கள் மிகைக் கடப்பாட்டுக் கட்டணங்களைத் தடுக்கும் வகையில் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக ஏடிபீ ஆல் மேற்கொள்ளப்பட்ட பாதிடப்பட்ட வட்டிக் கிரயம் ஐ.அ.டொலர் 1,030,000 ஆகும், எனினும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உண்மையான வட்டி கிரயம் ரூபா 430 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 1,259,693 ஆக இருந்ததுடன் மிகை வட்டிக் கிரயம் ரூபா 79.2 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 229,693 ஆகும். | ஐ.அ.டொலர் 229,693 | ஏடிபீ கடன் வட்டியை நேரடியாக கடன் கணக்கிலிருந்து அறவிடுகிறதுடன் அது தொடர்பான விபரங்கள் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு (ERD) தெரிவிக்கப்படுகிறது. செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் (PAM) பிரகாரம் 2023 ஆம் ஆண்டின் இறுதியளவில் மொத்தக் கடன் வட்டி ஒதுக்கீடு ஐ.அ.டொலர் | மிகை வட்டியைத் தடுப்பதற்கு பாதீடாக பணவளிப்பின் முன்னேற்றம் உயர் மட்டத்தில் இருக்க வேண்டும். |

7,850,000 ஆகும். அதேநேரம், அந்தக் காலப்பகுதிக்கான உண்மையான வட்டி ஐ.அ.டொலர் 1,479,907 ஆக உள்ளதால், PAM இல் உள்ள கடன் வட்டியில் குறைப்பயன்பாடு இருப்பது தெளிவாகிறது. பணவளிப்புக்களில் மெதுவான முன்னேற்றம் காரணமாக இது இடம்பெற்றது. மேலும், வரவிருக்கும் ஏடிபீ இடைக்கால மீளாய்வு பணியின் போது இந்த மாற்றங்கள் பற்றி கலந்துரையாடி PAM ஐ திருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கூறு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) நோக்கெல்லை மாற்றங்கள் | 2023 ஏப்ரல் 28 ஆம் திகதிய திருத்தப்பட்ட செயற்திட்ட நிர்வாகக் கையேட்டின் பிரகாரம், விலை வேறுபாடுகள் மற்றும் ஏனைய கட்டணங்களின் அதிகரிப்பு காரணமாக செயற்திட்டத்திற்கு ஐ.அ.டொலர் 15 மில்லியன் மேலதிக கிரயம் தேவைப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இதன் நோக்கத்துடன், செயற்திட்டத்தின் ஆரம்ப நோக்கெல்லையில் உள்ளடக்கப்பட்ட ஐ.அ.டொலர் 10 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்துடனான நான்கு உப செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படுவதில்லை என முடிவு செய்யப்பட்டிருந்தது. | | |
| | (i) செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் நடாத்தப்பட்ட சாத்தியவள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் அமுல்ப்படுத்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியிருந்த பாடசாலை வீதி பால நிர்மாண உப செயற்திட்டம் குறித்த செயற்திட்டத்தின் பரிந்துரைகளுக்கு | புகையிரதத் திணைக்களம் முன்வைத்த கோரிக்கைகளுக்கு இணங்க செயற்திட்ட வழிநடாத்தல் குழுவில் கலந்துரையாடப்பட்ட பின்னர் | முறையான மதிப்பீட்டின் பிரகாரம் நோக்கெல்லை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் மேலும் இது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முரணாக நிறுத்தப்படுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் நோக்கெல்லை மாற்றப்பட்டுள்ளது. இது செயற்திட்டத்தின் நோக்கங்களுடன் முரண்படவில்லை. | செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கங்களை மோசமாகப் பாதிக்கக் கூடாது. |
| | | (ii) சாத்தியவள ஆய்வில் புகையிரத தாமதத்திற்கு முக்கிய காரணம் என இனங்காணப்பட்ட தெமட்டகொட மற்றும் மருதானை புகையிரத நிலையங்களுக்கு இடையிலான போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக இந்தப் பாடசாலைப் பாதைக்கு விசேட முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய போதிலும் இந்த உப செயற்திட்டம் தொடங்கப்படாததால் உப செயற்திட்டத்தை நிறுத்துவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், செயற்திட்டத்தின் நோக்கெல்லையை மாற்றியமைப்பதற்கு செயற்திட்ட உபகுழு எடுத்த முடிவு, செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த இலக்குகளின் மீதான தாக்கத்தின் சரியான மதிப்பீட்டின் மூலம் எடுக்கப்பட்டதென அவதானிக்கப்படவில்லை. | புகையிரதத் திணைக்களம் விடுத்த கோரிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் நோக்கெல்லை மாற்றப்பட்டுள்ளது. | முறையான மதிப்பீட்டின் மூலம் நோக்கெல்லை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் மேலும் இது செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கங்களை மோசமாகப் பாதிக்கக் கூடாது. |
| (ஆ) | கண்டியை அண்டிய புகையிரத செயற்திட்டம் (KSRP) | நிதி, சுற்றாடல் மற்றும் சமூக பகுப்பாய்வு, விரிவான பொறியியல் திட்டங்கள், கேள்வி ஆவணங்கள் மற்றும் இறுதி அறிக்கைகளை பெறுதல் மற்றும் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களை சம்பந்தப்பட்ட ஆலோசனை நிறுவன நடவடிக்கைகளில் இருந்து மதிப்பிடுதல் ஆகியவற்றிற்கு 2019 முதல் 2024 வரை ரூபா 194 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 04 ஆண்டுகளுக்கும் மேலாக செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்பட்ட செலவினம் ரூபா 719 மில்லியன் ஆகும்.<br><br>ஆலோசனை கம்பனி ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதை இடைநிறுத்தியுள்ளதுடன் செயற்திட்டத்தைத் தொடங்குவதற்கு தேவையான நிதி இன்னும் | செயற்திட்டத்தின் நோக்கெல்லை சாத்தியவள ஆய்வு மற்றும் விரிவான வடிவமைப்பு தயாரிப்பு மாத்திரமேயாகும், எனவே அதனை நிறைவேற்றுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றதுடன் நிர்மாண பணிகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதியை வழங்குவது செயற்திட்ட நோக்கெல்லைக்கு வெளியேயான ஒரு செயற்பாடாகும். | காலதாமதம் இன்றி செயற்திட்ட நோக்கெல்லை மற்றும் கிரயத்திற்குள் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கண்டறியப்படவில்லை, எனவே, மேலே குறிப்பிடப்பட்ட அறிக்கைகள் காலாவதியாகலாம். மேலும் செயற்திட்டத்திற்காக ஏற்பட்ட செலவினங்கள் பயனற்றதாக இருக்கலாம். | | |
| (இ) | நாடளாவிய புகையிரத தொலைத்தொடர்பு முறைமை மேம்பாட்டு செயற்திட்டம் | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நவீன புகையிரத தொடர்பாடல் முறைமைக்காக ரூபா 1,901 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தமையானது செயற்திட்டத்தின் நடைமுறைப் பாவனையின் தோல்வி மற்றும் நோக்கங்கள் அடைந்துகொள்ளப்பட்டிருக்காதமை காரணமாக பயனற்றதாகியிருந்தமை அவதானிக்கப்பட்டது.<br><br>மேலும், ஒப்பந்ததாரரால் தயாரிக்கப்பட்ட மாதாந்த பராமரிப்பு அறிக்கைகள், கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட களப் பரீட்சிப்பு மற்றும் செயலாற்றல் கணக்காய்வு ஆகியவற்றின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| | | (i) புகையிரத கட்டுப்பாட்டு மையங்கள் மற்றும் நிலையங்களில் புகையிரத போக்குவரத்து தொடர்பான தகவல்களை புதுப்பிப்பதற்காக இன்ஜின்களில் தொடர்பாடல் சாதனங்களை நிறுவுவதற்காக ரூபா 274 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. 2023 மே 2 ஆம் திகதிய புகையிரத பொது முகாமையாளரின் 09 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து முறைமை பயனர்களும் தொடர்புடைய சாதனங்களை வேலை நேரத்தில் இயக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்ட போதிலும், புகையிரத சாரதிகள் இந்த சாதனங்களை பயன்படுத்தி முறைமையை அணுகாதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இந்த சாதனங்களின் செயற்படு பயன்பாடு தொடர்பான மாதாந்த பராமரிப்பு அறிக்கைகளின் பிரகாரம், சராசரி சதவீதம் 11 சதவீதம் மாத்திரமே ஆகும். உபகரணங்கள் போன்றவற்றில் ஏற்பட்டுள்ள அணுகல் மற்றும் தொழில்நுட்ப சிக்கல்கள் | குறித்த உபகரணங்களை பயன்படுத்தாதமை தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த குழு அறிக்கையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | தொடர்பாடல் முறைமை அதிகபட்ச செயற்திறனுடன் செயற்படுத்தப்பட வேண்டியதுடன் உத்தியோகத்தர்கள் உரிய பிரமாணங்களுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக, இந்த உபகரணங்கள் திறமையாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்படுகிறது. | | |
| (ii) | இந்த செயற்திட்டத்தின் கீழ் புகையிரத இயக்கக் கடமைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு கையடக்கத் தொலைபேசிகளை வழங்குவதற்காக ரூபா 132 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த தொலைபேசிகளைப் பயன்படுத்தி, சம்பந்தப்பட்ட புகையிரத நிலையங்கள் மற்றும் கட்டுப்பாட்டு மையங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களிடையே செய்திகளைப் பரிமாறுவதன் மூலம் புகையிரத போக்குவரத்து தொடர்பான தகவல்கள் புதுப்பிக்கப்பட வேண்டும்.<br><br>உத்தியோகபூர்வ பணிகளுக்கு சாதனங்கள் பயன்படுத்தப்படாததால், இந்த சாதனங்களின் சுறுசுறுப்பான பயன்பாடு குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | குறித்த உபகரணங்களை பயன்படுத்தாதமை தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த குழு அறிக்கையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | தொடர்பாடல் முறைமை அதிகபட்ச செயற்திறனுடன் செயற்படுத்தப்பட வேண்டியதுடன் உத்தியோகத்தர்கள் உரிய பிரமாணங்களுடன் இணங்குதல் வேண்டும். |
| (iii) | புகையிரத நிலையங்கள், கட்டுப்பாட்டு நிலையங்கள், சிக்னல் சாவடிகள் மற்றும் புகையிரத வாயில்களில் புகையிரத கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களிடையே முறையான தொடர்பாடலை பேணுவதற்கு எதிர்பார்த்து ரூபா 72 மில்லியன் பெறுமதியான நிலையான தொலைபேசிகள் மற்றும் சாதனங்கள் நிறுவப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்பப் பிழைகள் மற்றும் செயற்பாட்டு பலவீனங்கள் காரணமாகக் குறித்த தொலைபேசிகள் மற்றும் சாதனங்களின் சுறுசுறுப்பான பயன்பாடு குறைவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது, மேலும் புகையிரத செயற்பாட்டு மையங்களிற்காக ரூபா 61,457,916 கிரயத்தில் வழங்கப்பட்ட முறைமை கண்காணிப்பு சாதனம் (SMD) | குறித்த உபகரணங்களை பயன்படுத்தாதமை தொடர்பில் உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த குழு அறிக்கையின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | தொடர்பாடல் முறைமை அதிகபட்ச செயற்திறனுடன் செயற்படுத்தப்பட வேண்டியதுடன் உத்தியோகத்தர்கள் உரிய பிரமாணங்களுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் குரல் பதிவு சாதனம் (VRD) புகையிரத சாரதிகள் முறைமையை அணுகாததால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | மலையகப் புகையிரத பாதையின் (மெயின்லைன்) 12.5 கிலோமீற்றர் மற்றும் புகையிரத சுரங்கப் பாதைகள் தொடர்பான மொத்தப் பகுதிகளை உள்ளடக்கும் வகையில் தொடர்பாடல் வலையமைப்பு நிறுவப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தொடர் தொடர்பாடல் வலையமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இல்லை. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் வலையமைப்பு நிறுவப்பட வேண்டும். |
| (v) | ஒப்பந்ததாரர் 9 ஆண்டு காலப்பகுதியின் போது சேவை உடன்படிக்கையின் பிரகாரம் தொடர்பாடல் முறைமையின் பராமரிப்பு மற்றும் செயற்பாட்டு ஆதரவை மேற்கொள்ள வேண்டும். எனினும், SLR மூலம் பராமரிப்பு காலப்பகுதியில் ஏற்பட்ட சாதனங்களின் தொழில்நுட்ப பிழைகள் மற்றும் ஏனைய பிரச்சனைகள் குறித்து ஒப்பந்ததாரருக்கு தெரிவிக்கப்படாததால் உத்தரவாதக் காலப்பகுதியில் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புக்களை இலவசமாகப் பெற்றுக்கொள்ளாத அபாயம் உள்ளது. | டயலொக் அக்சியாட்டா பிஎல்சீ உடன் பராமரிப்புச் சேவை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது, அதன் பிரகாரம், தொடர்பாடல் முறைமையில் மேம்பாடுகள்/ மாற்றங்களுக்குத் தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கு செயற்பாட்டுக் குழு மற்றும் வழிநடாத்தல் குழு நியமிக்கப்பட்டுள்ளது. | சேவை உடன்படிக்கையின் பிரகாரம் தொழில்நுட்பப் பிழைகள் மற்றும் ஏனைய சிக்கல்கள் தொடர்பாக ஒப்பந்ததாரருக்குத் தெரிவித்திருக்க வேண்டும். |
| (vi) | தொடர்பாடல் முறைமையின் பராமரிப்பு மற்றும் செயற்பாடுகள் SLR வசம் ஒப்படைக்கப்பட்ட போது தடங்கலின்றி முறைமையை இயக்குவதற்கு முறைமை விபரக்குறிப்பு தேவைப்பாடுகளுக்கு ஏற்ப புகையிரத சேவையின் மூலம் பொருத்தமான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் வடிவமைக்கப்பட்டு நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். எனினும், திணைக்கள மட்டத்தில் பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் பொருத்தமான பதவியணியினர் கண்டறியப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை | பதவியணியினருக்கான பயிற்சிகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளன, மேலும் பயிற்சி நடவடிக்கைகள் முறைமை நிறுவப்பட்ட பின்னர் அமுல்ப்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | முறைமை விபரக்குறிப்பு தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பொருத்தமான உள்ளக கட்டுப்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட்டு அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொழும்பை அண்டிய புகையிரத செயற்திட்டத்தின் கீழ் ஏடிபீ கடனைப் பயன்படுத்தி களனி பள்ளத்தாக்கு புகையிரத பாதையின் வலதுபுறம் (RoW) வசிக்கும் 120 குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்காக மலபல்லவில் குடியிருப்புக்களை நிர்மாணிப்பது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | | |
| (i) | ஒப்பந்தத்தை வழங்குவதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று 05 மாதங்களுக்குப் பின்னர் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது, அதன் பிரகாரம், போக்குவரத்து அமைச்சு மெகா எஞ்சினியரிங் பிறைவேட் லிமிட்டட்டுடன் ரூபா 1,317 மில்லியன் வரியற்ற பெறுமதிக்காக ஒப்பந்த உடன்படிக்கையில் ஈடுபட்டுள்ளது. ஒப்பந்தம் 2021 யூன் 04 இல் தொடங்கப்படவதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன் ஒப்பந்த காலப்பகுதி ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து 36 மாதங்கள் ஆகும். நிர்மாண காலப்பகுதியின் முதல் நீடிப்புக்குப் பின்னர், நிர்மாணப் பணிகள் 2021 யூன் 21 இல் தொடங்கப்பட்டு 2024 யூன் 4 இல் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. ஆனால் செயற்திட்ட பணிப்பாளரின் கடிதத்தின் பிரகாரம் செயற்திட்டம் தொடங்கும் திகதி 2022 சனவரி 5 வரை மேலும் 06 மாதங்களால் தாமதமானது. | ரூபா 858.5 மில்லியன் மதிப்பிடப்பட்ட விலை அதிகரிப்பு உண்மையான வேறுபாடு மற்றும் கொடுப்பனவு மதிப்பீடு செய்யப்படுகிறதால் அதிகரிப்பு அல்லது வீழ்ச்சிக்கு உட்படுகிறது. இதற்கான ஏற்பாடு உடன்படிக்கையின் விதிமுறைகளில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் தற்போதைய சந்தை விலை ஏற்ற இறக்கங்கள் இதனை பாதித்துள்ளன. எனவே, ஒப்பந்ததாரர் இந்த கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் உரித்துள்ளவராவர். | உடன்படிக்கையின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் ஒப்பந்தம் உரிய திகதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (ii) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிர்மாண செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 45 சதவீதமாக மாத்திரமே உள்ளது, மேலும் பட்டியலிடப்பட்ட திகதியில் செயற்திட்டத்தை பூர்த்திசெய்து ஒப்படைப்பது குறித்து மேலும் நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுகின்றன. 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை செயற்திட்டத்திற்கான கேள்விதாரர்களைத் தெரிவுசெய்வதற்கு இரண்டு ஆண்டுகள் செலவிடப்பட்டிருந்தன, காலதாமதத்திற்காக வழங்கப்பட்ட நாட்கள் நீட்டிக்கப்பட்டதன் காரணமாக 65 சதவீத விலை வேறுபாடு அவ்வப்போது ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | பௌதீக முன்னேற்றம் 2023.12.31 இல் உள்ளவாறு 45% ஆக உள்ளதுடன் அது இதுவரை (2024.05.20) 76% முன்னேற்றத்தை அடைந்துள்ளது. திருத்தப்பட்ட பணித் திட்டத்தின் பிரகாரம் தாமதமின்றி இந்த ஆண்டு நவம்பர் 11 அளவில் பூர்த்தி செய்வதற்கு ஏற்கனவே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | எந்த தாமதமும் இன்றி திருத்தப்பட்ட வேலைத் திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | (i) | இலங்கை புகையிரத திணைக்களத்திற்காக சிமார்ட் பயணச்சீட்டு முறைமைக்கான நீண்ட கேள்வி மதிப்பீட்டு செயன்முறை 2018 இல் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், 2021 மே 31 இல் செயற்திட்டத்தை பூர்த்திசெய்வதற்கான ஒப்பந்தம் ஐ.அ.டொலர் 19 மில்லியன் கிரயத்தில் 2019 இல் தனியார் கம்பனி ஒன்றுடன் கைச்சாத்திடப்பட்டிருந்தது. திருத்தப்பட்ட செயற்திட்ட நிர்வாக கையேட்டின் பிரகாரம் செயற்திட்ட பூர்த்திசெய்தல் திகதி 2024 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. ரூபா 321 மில்லியன் தொகை முற்பணமாக செலுத்தப்பட்டு, செயற்திட்டம் தொடர்பான நடவடிக்கைகளுக்காக 2020 ஆம் ஆண்டு முதல் ஆலோசனை அமர்த்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்தில் எந்த முன்னேற்றமும் இல்லாமல் ரூபா 21 மில்லியன் தொகை ஆலோசனைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்து இரண்டு ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அதன் வெளியீடுகளை வழங்குவதில் பின்தங்கிய நிலை உள்ளது.<br><br>புகையிரத திணைக்களத்தின் தேவையை ஒப்பந்ததாரர் இனங்கண்டு கொள்வதில் ஏற்பட்ட தாமதமும், அப்போது நாட்டில் நிலவும் நிலையற்ற தன்மையும் இதற்கு நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. | செயற்திட்டம் தாமதமின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| | (ii) | பட்டியலிடப்பட்ட திகதியில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதில் நிச்சயமற்ற நிலைமை உள்ளமையும் பௌதீக முன்னேற்றம் 2024 யூன் 30 இல் உள்ளவாறு 34 சதவீதமாக இருந்தமை மற்றும் முழு பெறுகை செயன்முறையின் செயற்திறனின்மை காரணமாக எதிர்பார்த்த செயலாற்றலை அடைந்துகொள்ள முடியாதமையும் அவதானிக்கப்பட்டது. | பௌதீக செயற்பாட்டு செயலாற்றலில் மந்தநிலை உள்ளதுடன் குறிப்பிட்ட காலத்திற்குள் செயற்திட்டத்தை பூர்த்திசெய்வதற்கு ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் பணிகள் நடைபெற்று வருகின்றன. | செயற்திட்டம் தாமதமின்றி பூர்த்தி செய்யப்பட வேண்டும். |